குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.128/2020

அ.சா.4

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனியப்ப கவுண்டர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 02.02 மணி,

Accused A2.Manikandan present. A1.Chinnapaiyan S/o.Arumugam died and charge abated. Advocate Mr.Siddharthasankar present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் வ.உ.சி நகர் ஜெயா தியேட்டர் பின்புறம் குடியிருந்து, ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 02.00 மணியளவில் அ.சா.1–ன் வீட்டில் இருந்து திருடன் திருடன் என்று சத்தம் கேட்டது. நானும், அருகில் இருந்தவர்களும் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தோம். ஆனால், திருடிய நபரை பிடிக்கமுடியவில்லை.

2. அ.சா.1 கலைச்செல்வியின் கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடியை பறித்துச் சென்றுவிட்டதாக சொன்னார்கள். அதன்பின்பு போலிசாருக்கு தகவல் சொன்னார்கள். போலிசார் அப்போதே சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அதன்பின்பு மீண்டும் காலை சம்பவ இடத்திற்கு வந்து போலிசார் விசாரித்தார்கள். அவர்கள் காலை வந்து விசாரித்தபோது, நான் வீட்டில் இல்லை வெளியில் சென்றுவிட்டேன்.

3. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி கையெழுத்தினை எப்போது போட்டேன் என்று தற்போது நினைவில் இல்லை. ஆனால் கலைச்செல்வியின் வீட்டருகே வைத்து போலிசார் அந்த கையெழுத்தை

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:39 +0530

வாங்கினார்கள். கையெழுத்து வாங்குவதற்கு முன்பாக போலிசார் சம்பவ இடத்தை சுற்றி பார்த்து, இடத்தினை பார்வையிட்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 27.03.2019 ம் தேதி பகல் 12.30 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த போது நான் சாட்சியாக உடனிருந்து சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரி.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. நான் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனது வீட்டிற்கும், அ.சா.1ன் வீட்டிற்கும் சுமார் 20 அடி தூரம் இருக்கும். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. என்னிடம் கையெழுத்து பெற்ற போது ஒரு போலிசார் சம்பவ இடம் வந்தார்கள். சம்பவம் நடந்த அன்று இரவு போலிசார் கையெழுத்து கேட்டபோது நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.11 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.17 18:02:44 +0530